**TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,**
(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)
Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமை செயல் அலுவலர் (கூ. பொ), முன்னிலை: திருமதி. ஷ்ரேயா P சிங், இ. ஆ. ப., அவர்களின் செயல்முறைகள் ஆணை

**செயல்முறை ஆணை எண். 118/ 2024/ த . மா . ஊ. வா . இ** **நாள்: 04-06-2024**

பொருள் த.மா.ஊ.வா. இ– தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் – சான்றலிக்கப்பட்ட விதை உற்பத்தி செய்தல் திட்டம் செயல்படுத்துதல் – தொடர்பாக

பார்வை
3. தே. ஊ. வா. இ. – ஆண்டு செயல் திட்டம் 2024–25 – அனுமதி வழங்கப்பட்ட செயல் திட்டங்கள்
4. 20.02.2024 அன்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு.

*****

**ஆணை**

20.02.2024 அன்று மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவிப்பு எண் 77 (ii) ல் ஊரக வளர்ச்சி எனும் துறையின் கீழ், பண்ணை மகளிர் சுய உதவிக்குழுக்கள் எனும் தலைப்பில் வெளியிட்ட அறிவிப்பு – விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைத்தல் தொடரபாக.

**அறிவிப்பு**

வேளாண் உற்பத்திக்கு விதையே முக்கிய இடுபொருள் என்பதால் பயறு வகைகள் எண்ணெய்வித்துகளில் 100 விதை உற்பத்தித் தொகுப்புகள் அமைப்பதற்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இதற்குத் தேவையான பயிற்சியும் ஆதார விதைகளும் வேளாண்மைத்துறை வழங்குவதுடன் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த விதைகளை உற்பத்தி மானியம் வழங்கி வேளாண்மைத் துறையே கொள்முதல் செய்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

**முன்னுரை**

வேளாண்மையில் பயிரின் விளைச்சலுக்கு தரமான விதையே மூலதனம். தரமான விதை என்பது பாரம்பரிய குணங்களில் சிறிதும் குறையாமல், பிற ரகம் மற்றும் பிற பயிர்கள் கலப்பு இல்லாமல் தூசி தும்பு இல்லாமல் பூச்சி பூஞ்சானம் தாக்காமல் அதிக முளைப்பு திறன்இருக்கும் விதையே தரமான விதை ஆகும்.

தரமான விதைகள் என்றால் விதைச்சான்று பெற்ற விதைகளாக இருக்க வேண்டும். அவ்வகை விதைகள்அதிகப்படியான முளைப்புத் திறன்இ சாியான பயிர் எண்ணிக்கைஇ சீரான பயிர் வளிர்ச்சிஇ ஒரே நேரத்தில் பூத்து முதிரும் பயிர் ஒரே நேரத்தில் அறுவடை, அதிக மகசூல் தருபவை .

**விதைச்சான்று நடை முறை**

Phone : 91-44-2817 3412 / 13 / 14 Fax : 91-44-2817 3409
E-mail : tncdwho@yahoo.co.in Web : http://www.tamilnaduwomen.org

பயிர் விதைகளை விதைப்பு செய்த 35 நாட்களுக்கு அல்லது பூப்பதற்கு 15 நாட்கள் முன்னதாகவோ தங்கள் பகுதி விதைச்சான்று உதவி இயக்குநா; அலுவலகத்தில் விதைப்பு அறிக்கை (ளுழறைபெ சுநிழசவ) 3 நகல்களில் உரிய படிவத்தில் பதிவு செய்யப்படவேண்டும்.

விதைப்பு அறிக்கை படிவத்தின் பின்புறம் வயலின் வரைபடம் இருக்க வேண்டும். இத்துடன் விதைகளுக்கான சான்றட்டைகள் விதை வாங்கிய விற்பனை ரசீது இணைக்கப்படவேண்டும. ஒரு விதைப்பு அறிக்கையில் அதிகபட்சமாக 25 ஏக்கா; வரை பதிவு செய்யலாம். விதைப்பண்ணையின் இருவேறு பகுதிகள் 50 மீட்டருக்கு மேல் இருந்தாலோ, விதைப்பு நாள் 7 நாட்களுக்கு மேல் வித்தியாசப்பட்டாலோ, தனித்தனி விதைப்பு அறிக்கைகளில் பதிவு செய்யவேண்டும்.

**விதைப்பு அறிக்கை - (Sowing Report)**

1. விதைக்குரிய சான்றட்டை (ஆதாரம் (அ) சான்று
2. விதை வாங்கிய பில் (அதில் சான்றட்டை எண்கள் குறிக்கப்பட வேண்டும்)
3. நிலத்தின் வரைபடம்
4. பதிவு கட்டணம் (பயிர் வாரியாக)

**வயலாய்வு (Field Inspection)**

விதைச்சான்று அலுவலர் முதல் ஆய்வில் (பூக்கும் தருணத்தில்) விதை ஆதாரம், சான்றட்டை, விதை வாங்கிய விபரம், பரப்பளவு போன்ற விபரங்களை ஆய்வு செய்வார். தவறாக இருந்தால் தள்ளுபடி செய்வார்.

விதைப்பண்ணை வயலில் பயிர் விலகு தூரம் உள்ளதா, கலவன்கள், மறுக்கப்படும் களைச்செடிகள் நோய் தாக்கிய பயிர்கள் அதிகம் இருந்தால் அவ்வயலை தள்ளுபடி செய்து விடுவார்கள்.

சான்று நிலை பயிர்களுக்கு மட்டும் ஊடு பயிர் அனுமதிப்பார். உற்பத்தியாளர் அல்லது பிரதிநிதி வயலாய்வின் போது உடனிருக்க வேண்டும். அனைத்தும் தேறிய நிலையில் விதைச் சான்று அலுவலர் இறுதி ஆய்வில் மகசூல் கனிப்பு மேற்கொண்ட பிறகு அறுவடைக்கு அனுமதிப்பார்.

**சுத்தி அறிக்கை பெறுதல;;:– (Processing Report Requested )**

அறுவடை செய்த விதைகளை முதல் 3 தினங்கள் நன்கு காய்ச்சல் போட வேண்டும். சிமெண்ட் தரையில் போடக்கூடாது தூசி, தும்பு, பதா; விதைகள், வைக்கோல், துண்டுகள் இல்லாதவாறு நன்கு தூற்றி சுத்தமான விதைகளாக்க வேண்டும். உரிய படிவத்தில் சுத்தி அறிக்கை கோரி விதைச் சான்று அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இறுதி வயலாய்வலிருந்து 3 மாதங்களுக்குள் வயல்மட்ட விதைகள் விதை சுத்திகாிப்பு நிலையத்திற்குள் வரவேண்டும்.

விதைச்சான்று அலுவலா; வயல்மட்ட விதைகளை விதைகள் சுத்தமாக உள்ளதா. கலவன்கள் உள்ளதா என ஆய்வு செய்து திருப்தியாக இருந்தால் மட்டுமே விதை சுத்தி அறிக்கை வழங்குவார். அதன்பின் புதிய கோணிப்பைகளில் அடைத்து விதைகளை சுத்திகாிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படும்.

**விதை உற்பத்தியாளர; தொகுப்பு அமைப்பு**

- ஒரு விதை உற்பத்தியாளர் தொகுப்பு; 5 முதல் 10 வரையிலான் சிறு, குறு பெண் விவசாயிகள் இருத்தல் வேண்டும்.
- இவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக இருத்தல் அவசியம்.
- அதே பகுதியைச் சார்ந்தவராகவோ அல்லது அதே . வட்டாரத்தைச் சார்ந்தவராகவோ இருக்க வேண்டும்.
- விதைப் பண்ணை உற்பத்தி தொகுப்பிற;கு தலைவர், செயலாளர், பொருளாளர் என 3 நிர்வாகிகள் குழுவிலிருந்து தோ;ந்து எடுக்க வேண்டும;.
- வங்கிக் கணக்கினை செயலாளர் மற்றும் பொருளாளர் இயக்குவர்.
- குறைந்தது மாதம் இரு முறை தொகுப்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும்

**பயிற்சி**

விதை உற்பத்தி மேற்கொள்வதற்கான பயிற்சி பயனாளிகளுக்கு விதை சான்றலிப்புத் துறை மூலம் வழங்கப்படும் .

**நிதி ஆதாரம்**

- ஒவ்வொரு விதை உற்பத்தியாளர் தொகுப்பிற்கும; திட்ட நிதி ரூ.2,00,000 சுழல்நிதியாக வழங்கப்படும்..
- திட்ட நிதியானது சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வழியாக விதை உற்பத்தியாளர் தொகுப்பிற்கு வழங்கப்படும்.
- ஒரு விதை உற்பத்தி அலகுக்கு (5–6 ஏக்கர் விதை பயிர் சாகுபடிக்கு) வழங்கப்படும் ரூ.2 இலட்சத்திற்கான பயன் படுத்தவேண்டிய விபரம்.

| நடவடிக்கைகள் | தொகை (ரூபாயில்) |
|---|---|
| விதைகள் மற்றும் உள்ளீடுகளின் விலை | 30,000 |
| சாகுபடி செலவு | 80,000 |
| அறுவடை & அறுவடைக்குப் பின் கையாளும் செலவு | 60,,000 |
| போக்குவரத்து, ஏற்றுதல் & இறக்குதல் கட்டணம் | 20,,000 |
| விதை சான்றளிப்பு தரநிலை இணக்கம் | 10,,000 |
| **மொத்தம்** | **200,,000** |

**கடனை திருப்பி செலுத்துதல்:**

- விதை உற்பத்திக்காக சுழல் நிதியாக வழங்கிய ரூ.2,00,000/-ஐ 6 சதவிகித வட்டியுடன் இந்த தொகுப்பின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் .
- மாதாந்திர கூட்டம் நடைபெறும் தினத்திற்கு முன்பாக தவணைத்தொகையினை தொகுப்பு வங்கிக்கணக்கில் செலுத்த வேண்டும்.
- கரும்பு நாற்று உற்பத்தியாளர் தொகுப்பின் ஊக்குநர் பிரதிநிதிகள் (செயலாளர், பொருளாளர்) இந்த கடன் தவணையை தொகுப்பின் வங்கிக் கணக்கில் முறையாக செலுத்தி கடன் வசூல் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

**பாராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள்**

5. தீர்மானப் பதிவேடு
6. வங்கி Passbook
7. கடன் வசூல் பதிவேடு

**கண்காணிப்பு**

- சமுதாய வள பயிற்றுனர் கடன் தவணைகளை முறையாக (பண்ணை) விதை உற்பத்தியாளர் தொகுப்பின் வங்கிக் கணக்கில் செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும் .
- மாவட்ட வள பயிற்றுனர் (பண்ணை)விதை உற்பத்தி செய்யப்படும் வயலை மாதம் ஒரு முறை நேரில் சென்று பார்வையிட்டு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை விதை சான்றளிப்பு அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் வழங்க வேண்டும் .
- உதவி திட்ட அலுவலர் (வாழ்வாதாரம்), மாவட்ட வள பயிற்றுநர் (பண்ணை) வட்டார மேலாளர் விதை உற்பத்தியாளர் தொகுப்பின் மாதந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு தொகுப்பினை ஆய்வு செய்ய வேண்டும் .
- திட்ட இயக்குனர் மாதங்களுக்கு ஒரு முறை 3 மகளிர் திட்டம் ,விதை உற்பத்தியாளர் தொகுப்பின் செயல்பாடுகளை நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும் .

**இலக்கு**

நடப்பு 2024-25 ஆம் ஆண்டில் அமைக்கவேண்டிய விதை உற்பத்தித் தொகுப்புகளுக்கான மாவட்ட வாரியான இலக்கு பின்வருமாறு

| வ . எண் | மாவட்டம் | விதை உற்பத்தி தொகுப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 2 |
| 2 | செங்கல்பட்டு | 2 |
| 3 | கோயம்புத்தூர் | 5 |
| 4 | கடலூர் | 2 |
| 5 | தருமபுரி | 4 |
| 6 | திண்டுக்கல் | 5 |
| 7 | ஈரோடு | 4 |
| 8 | கள்ளக்குறிச்சி | 3 |
| 9 | காஞ்சிபுரம் | 2 |

TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,
(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)
Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

| வ. எண் | மாவட்டம் | விதை உற்பத்தி தொகுப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 10 | கன்னியாகுமரி | |
| 11 | கரூர் | 3 |
| 12 | கிருஷ்ணகிரி | 2 |
| 13 | மதுரை | 2 |
| 14 | மயிலாடுதுறை | 2 |
| 15 | நாகப்பட்டினம் | 2 |
| 16 | நாமக்கல் | 2 |
| 17 | பெரம்பலூர் | 2 |
| 18 | புதுக்கோட்டை | 5 |
| 19 | ராமநாதபுரம் | 2 |
| 20 | ராணிப்பேட்டை | 2 |
| 21 | சேலம் | 4 |
| 22 | சிவகங்கை | 2 |
| 23 | தென்காசி | |
| 24 | தஞ்சாவூர் | 3 |
| 25 | பிறகு நான் | 4 |
| 26 | திருநெல்வேலி | 4 |
| 27 | திருவள்ளூர் | 3 |
| 28 | திருவண்ணாமலை | 5 |
| 29 | திருவாரூர் | |
| 30 | தூத்துக்குடி | 5 |
| 31 | திருப்பத்தூர் | 3 |
| 32 | திருப்பூர் | |
| 33 | திருச்சி | 4 |
| 34 | வேலூர் | 4 |
| 35 | விழுப்புரம் | 3 |
| 36 | விருதுநகர் | 3 |
| 37 | நீலகிரி | |
| மொத்தம் | | 100 |

ஓம்......
நிர்வாக இயக்குனர் (கூ. பொ)

//உண்மை நகல்//

8/c 1/7/24

கூடுதல் இயக்குநர் (வா)/ (பொ)